போட்டோம். அதாவது நான் ஏற்கனவே சொன்ன பதிலில் குறிப்பிட்டதைப்போல, 1—2—1983 முதல் விதிக்கப்பட்டது; 22—2—1983-ல் இக்கட்டணம் ரத்து செய்யப்பட்டது. அதற்குப் பிறகு பணிக்கர் குழு போடப்பட்டது. ஆகவே, இப்பொழுது அந்த ஃப்யூயல் சர்சார்ஜ் இல்லை.

புதிய மின் திட்டங்களுக்கான மைய அரசின் அனுமதி.

176—(*வினா எண். 19936)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைய அரசு புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கு அனுமதி வழங்குகிறபோது நிபந்தனைகளின் அடிப்படையில் முடிவெடுப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், நிபந்தனைகளைத் தளர்த்தி மாநில மின் பற்றாக் குறையைக் கருத்தில் கொண்டு அனுமதி வழங்க மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) நிபந்தனைகள் திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவை என்பதால் தளர்த்த வேண்டியதில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படி நிபந்தனைகள் விதித்தாலும், கல்பாக்கம் அணுமின் நிலையத்தைப் பொறுத்தவரையில் அதில் உற்பத்தியாகக்கூடிய அனைத்து மின்சாரத்தையும் தமிழ் நாட்டிற்கே தருவதாக முதலில் ஒப்புக்கொள்ளப்பட்டு, பிறகு அண்டை மாநிலங்களுக்கும் பகிர்ந்து அளிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறதே, அப்படி இல்லாமல் அந்த மின் உற்பத்தி முழுவதையும் நாம் முழுமையாகப் பெறுவதற்கு எந்தவகையில் முயன்றிருக்கிறோம் என்ற விவரத்தையும், அதற்கு மத்திய அரசாங்கத்தின் பதில் என்ன என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மூலக் கேள்வி, புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கு அனுமதி வழங்குகிறபோது இந்திய அரசு எத்தகைய நிபந்தனைகளை விதிக்கிறது என்பதைப் பற்றிய கேள்வியாகும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கல்பாக்கத்தைப் பற்றிக் கேள்வி கேட்கிறார்கள். இன்னும் கொஞ்சம் நேரம் பொறுத்திருந்தால் அது நான்காவது கேள்வியாக வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படி அனுமதி அளிக்கப்பட வேண்டிய புதிய மின் திட்டங்கள் எத்தனை இன்னும் இருக்கின்றன? இதுவரையில்

984 மார்ச் 6]

எத்தனை மின் உற்பத்தி நிலையங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது என்ற விவரத்தையாவது அமைச்சரவர்கள் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல சிறு திட்டங்கள் அனுமதி அளிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்தாலும் நாம் வற்புறுத்தி வருவது, இரண்டு முக்கியமான திட்டங்கள். வட சென்னை அனல் மின் திட்டம், தூத்துக்குடி விரிவாக்கத் திட்டம். வட சென்னை அனல் மின் திட்டத்திற்கு நாம் 210 மெகாவாட் உற்பத்தித் திறன்கொண்ட ஐந்து யூனிட்டுகள் கேட்டிருந்தோம். மூன்று யூனிட்டுகளுக்கான அனுமதி கிடைக்கும் தறுவாயில் இருக்கிறது. அதற்கான நிலக்கரி, மற்றவைகள் எல்லாம் தருவதற்கு இந்திய அரசு சம்மதித்திருக்கிறது. தூத்துக்குடியிலே அதேபோல இரண்டு யூனிட்டுகளை நாம் கேட்டிருக்கிறோம். அதற்கும் அனுமதி தரும் நிலையிலே இப்பொழுது இருக்கிறது. கடைசியாக 18—1—1984 அன்று மத்திய மின்சாரக் குழு சில விவரங்களைக் கேட்டிருந்தார்கள். அதையும் நாம் அனுப்பியிருக்கிறோம். தூத்துக்குடியைப் பொறுத்தவரையில் சில விவரங்களை மீண்டும் கேட்டிருக்கிறார்கள். இதற்கு 16—2—1984 அன்று இங்கிருந்து விவரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. விரைவில் இந்த இரண்டு திட்டங்களுக்கு அனுமதி கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறோம்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாட்டினுடைய வாழ்வும், வளமும் இந்த மின்சாரத்தோடு இணைந்திருப்பதாலே, மத்திய அரசாங்கம் போடுகின்ற நிபந்தனைகளினாலே நம்முடைய விவசாயமும், தொழில்களும் பாதிக்கப்படுகின்றனவே, ஆகவே, நான் அறிந்துகொள்ள விரும்புவதெல்லாம், இந்த நிபந்தனைகளையெல்லாம் அடுத்து நாம் போடும் திட்டத்தால் இந்த நடைமுறை ஆண்டிலே எவ்வளவு மெகாவாட் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்பதையும் அதற்கான திட்டத்தை அரசாங்கம் வைத்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்திய அரசு போடுகின்ற நிபந்தனை என்ன என்பதைச் சொல்லிவிட்டால் இந்தக் குழப்பம் வராது என்று கருதுகிறேன்.

1. மின் உற்பத்தி இயந்திரங்களும், சாதனங்களும் உள்நாட்டு நிறுவனங்களிலிருந்தே வாங்கப்படவேண்டும்.

2. திட்டத்தை நிறைவேற்ற அமுலில் இருக்கும் திட்ட காலத்தில் (கரன்ட் ப்ளான்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

3. அனல் மின் திட்டத்திற்குத் தேவையான நிலக்கரி கிடைப்பதற்கான வழிவகைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

4. அண்டை மாநிலங்களின் தொடர்புள்ள திட்டமாக இருந்தால், திட்டம் நிறைவேற அந்த மாநிலங்களின் ஒப்புதல் பெறவேண்டும்.

5. திட்டத்தின் காலமுறை முன்னேற்ற அறிக்கையை மத்திய மின் அதிகார மன்றத்திற்கும்/மத்திய திட்டக் குழுவிற்கும் அனுப்புதல் வேண்டும்.

6. திட்டங்கள் சரியானபடி வரையறுக்கப்பட்டுள்ள காலத்திற்குள் நிறைவேற்றும் பொருட்டு தேவையான கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்திருத்தல் வேண்டும்.

இவைகள் எல்லாம் அவர்கள் விதித்திருக்கின்ற கண்டிஷன்ஸ். ஆனால், இப்போது ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பீடு உள்ள திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. இதற்கு மாறாக, 10 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பீடு உள்ள திட்டங்களுக்கு மட்டும்தான் ஒப்புதலைப் பெறவேண்டும் என்று விதிமுறை செய்யவேண்டும் என்று நமது அரசின் சார்பிலே நான் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கலில் காவிரியில் கர்நாடக மாநில அரசும், தமிழக அரசும் சேர்ந்து புனல் மின்சாரம் தயாரிக்கின்ற திட்டம் ஏற்கெனவே ஆய்வில் இருந்தது. அது சம்பந்தமாக மத்திய அரசுக்கு எழுதப்பட்டிருக்கின்றதா ? மத்திய அரசு அதற்கு அனுமதி வழங்கிவிட்டதா என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது காவிரி சம்பந்தப்பட்டிருப்பதால், காவிரிப் பிரச்சினை தீருவதைப் பொறுத்துத்தான் இதுவும் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காடம்பாறை மின் திட்டம்.

177—(*வினா எண். 20038)—திரு. ஏ. டி. கருப்பையா மற்றும் திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காடம்பாறை நீரேற்று மின்திட்டம் முடிக்கப்படாமல் காலதாமதப்படுத்தப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.